[1978 ஏப்ரல் 1]

கூடிய முறையில் பலப் பல வண்ணங்களில் உருவாக்கக்கூடிய முறையில் கைத்தறித் துணிகளை மேலும் சிறப்புடையதாக்க அந்தப் பரிசுத் திட்டத்தை மாற்றியமைத்து இன்னும் பெருமள வில் பரிசளிக்கும் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஆரம்ப காலத்தில் கைத்தறித் துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டத்தில் தனியார் துறையைச் சார்ந்தவர்கள் பெருமளவில் ஈடுபட வேண்டுமென்று மத்திய அரசு ஊக்க உதவித் திட்டத்தை அமல் செய்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ளவர்களையும் ஓரளவு உற்சாகப்படுத்த வேண்டுமென்றுதான் பரிசுத் திட்டத்தை அமைத்திருக்கிறோம். இவ்வாறு ஊக்குவிக்கும் திட்டத்திற்குப் பதிலாக ஏற்றுமதிக்காக புதிய ஒழுங்குபடுத்தும் திட்டத்தை வைத்து நல்ல தரமான துணிகளை ஏற்றுமதி செய்யும் சூழ்நிலை இருக்கிற காரணத்தால் இந்தப் பரிசுத் திட்டம் இப்படியே தொடர்வது தேவைதானா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கும் காரணத்தால் இதை மேலும் அதிகப்படுத்துவதற்கு தற்போதைக்கு அரசுக்கு உத்தேசம் இல்லை.

திரு. சி. ஆறுமுகம் : இன்றைக்குப் பத்திரிகையில் பார்த்தேன். சென்னை நகரில் நடைபெறுகிற கைத்தறி வார விழாவில் இதற்கு முன்பெல்லாம் ஒவ்வொரு தலைவர்களை வைத்து நிகழ்ச்சிகளை நடத்துவது வழக்கம். இந்த ஆண்டு ஏதோ நாடகங்களை அறிமுகம் செய்திருக்கிறார்கள். என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர்களைப் பார்த்துப் பார்த்து மக்களுக்கு ஒருவேளை அலுப்பு ஏற்பட்டிருக்கலாம். எனவே, கலையின் மூலமாக, நாடகங்களின் மூலமாக மேலும் நல்ல முறையில் பிரச்சாரம் செய்யலாம் என்ற முறையிலே சிறப்பான முறையிலே ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கருத்த ராவுத்தர் கல்லூரி, உத்தமபாளையம்.

*765 வினா—திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாவட்டம், உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரி வக் போர்டின் நேரடி நிர்வாகத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(ஆ) புதிதாக அந்தக் கல்லூரிக்கு நிர்வாகக்குழு ஏதேனும் அமைக்கப்பட்டு இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1978 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும். (ஆ): ஹாஜி கருத்த இராவுத்தர் ஹௌதியா கல்லூரியின் பழைய நிர்வாகக் குழுவைக் கலைத்துவிட்டு புதிய நிர்வாகக் குழு ஒன்றை தமிழ்நாடு வக்ஃபு வாரியம் 1954-ஆம் ஆண்டு வக்ஃபு சட்டம் (மத்தியச்சட்டம் 29/1954) பிரிவு 43 (2)-ன் விதித்துறையின் கீழ் அமைத்துள்ளது.

(இ) புதிய நிர்வாகக் குழுவில் 11 உறுப்பினர்கள் அடங்கியுள்ளனர். இக்குழு 21-10-1977 அன்று பதவி ஏற்றுள்ளது. குழுவின் பதவிக்காலம் ஓராண்டாகும்.

திரு. ஏ. ரகுமான்கான்: மதுரை மாவட்டம் உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரியை வக்ஃபு போர்டின் நேரடி நிர்வாகத்திற்குக் கொண்டு வரப்படும் என்று அமைச்சர் அவர்கள் ஏற்கனவே உறுதிமொழி கொடுத்தார்கள். ஏன் அது இன்னும் வக்ஃப் போர்டால் எடுத்துக் கொள்ளப்படவில்லை? புதிதாக நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தக் குழு பத்து மாத காலமாக அந்தக் கல்லூரியில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கவில்லை. அது குறித்து என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது? நீதி மன்றத் தீர்ப்பின்படி கல்லூரிச் சொத்து அதன் சுவாதீனத்திற்கு வந்து விட்டதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரியில் அதற்குத் தேவையான அல்லது அந்தக் கல்லூரிக்குச் சொந்தமான சொத்துகள், இதற்கு முன்பு அந்தச் சொத்துக்களை எழுதி வைத்தவர்கள் குடும்பத்தைச் சார்ந்த பிள்ளைகளின் பராமரிப்பிலும், மேற்பார்வையிலும் இருந்து வந்தது. அதைக் கல்லூரிக்குக் கொடுத்துவிட வேண்டுமென்ற உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு 8-12-77-ல் தரப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு கல்லூரியின் நிர்வாகக் குழுவில் உள்ளவர்கள் அந்தச் சொத்துக்களைக் கல்லூரியின் மேற்பார்வையில் கொண்டு வரவேண்டுமென்று பல்வேறு முயற்சிகளை சட்ட ரீதியான முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். இன்னும் சொத்துக்கள் முழுவதும் கல்லூரியின் நேரடியான நிர்வாகத்திற்கு வந்து சேரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வக்ஃப் வாரியம், கல்லூரியின் நிர்வாகத்தில் ஏதாவது தவறுகள், குறைபாடுகள் ஏற்படுமானால் தாற்காலிகமாக அந்த நிர்வாகக் குழுவை மாற்றியமைப்பதற்குத்தான் இதுவரை முயற்சி செய்து வந்திருக்கிறது. அந்த நிர்வாகத்தை முழுவதுமாக வக்ஃப் வாரியம் எடுத்துக் கொள்ள சட்ட விதிகளில் இடம் இல்லை. தவறு இருக்குமானால் தற்காலிகமாக நிர்வாகக் குழுவை மாற்றி அமைக்கத்தான் வக்ஃப் சட்டம் இடம் அளிக்கிறது. அந்த வகையில் தாற்காலிகமான நிர்வாகக் குழுவை அமைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 ஏப்ரல் 1]

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகச் சீர்கேடுகள் அல்லது குறைகள் காரணமாக உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரியின் நிர்வாகக் குழுவின் மேல் தமிழக வக்ஃப் வாரியம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இதுபோன்றே தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள இஸ்லாமியச் சமுதாயத்தினரால் நடத்தப்படுகிற கல்லூரிகளில் உள்ள குறைகள், அவைகளைப்பற்றிய குற்றச்சாட்டுகள் புதுக் கல்லூரி போன்ற கல்லூரிகளின் மேல் கூறப்படுகின்றன, ஆகவே இப்படிப்பட்ட கல்லூரிகள் பற்றியும் தமிழக வக்ஃப் வாரியம் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப்போல் தமிழ்நாடு வக்ஃப் வாரியம், 1954 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டம் மத்திய சட்டம் 29, பிரிவு 43 (2) ன்படி இப்படிப்பட்ட கல்லூரிகளில் உள்ள நிர்வாகத்திலே ஏதாவது தவறுகள், முறைகேடுகள் இருக்குமானால் அந்த நிர்வாகக் குழுவைக் கலைத்துவிட்டு தாற்காலிகமாக ஒரு குழுவை நியமிக்க அதிகாரம் உடையதாய் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் மாநிலத்தில் உள்ள சிறுபான்மையோரால் நடத்தப்படுகிற கல்லூரிகளில் முறைகேடுகள் இருந்தால் அவைகளைப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன, அவைகள் பற்றியும் உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.)

(3) உரிமைப் பிரச்னை

பண்ருட்டி ஒன்றியத்தில் நடைபெற்ற வெள்ள நிவாரண வேலைகளைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் தவறான குற்றச்சாட்டுகளை சாட்டியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஆர். இராதா, திரு. கே. பண்ணை சேதுராம், டாக்டர் கே. சமரசம் ஆகியவர்கள் எதிர்க்கட்சி தலைவர் மீது அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டுவரவேண்டுமென்று அனுமதி கேட்டு இருக்கிறார்கள். நான் அதற்கு அனுமதி அளிக்கிறேன். சுருக்கமாக அதைப்பற்றி திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.